# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2006 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை தேசிய சிறுநீரக மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*(2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*


2006, செத்தெம்பர் மாதம் 29 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2006 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை தேசிய சிறுநீரக மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ (கூ) 32/2005

## இலங்கை தேசிய சிறுநீரக மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"இலங்கைத் தேசிய சிறுநீரக மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டிருந்ததாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்தி யுள்ளதுடன், கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாத லாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்களுக்கு நன்மை பயக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை தேசிய சிறுநீரக மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

இலங்கை தேசிய சிறுநீரக மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கைத் தேசிய சிறுநீரக மன்றத்தில் தற்போது உறுப்பினர் களாகவுள்ள அத்துடன் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "இலங்கைத் தேசிய சிறுநீரக மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களி லும் அவ்வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை

வைத்திருக்கவும் பயன்படுத்தவும், விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

*மன்றத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) சிறுநீரக நோய்கள் மற்றும் உரிய நேரத்தில் நோய்களுக்கு சிகிச்சையளிப்பது பற்றி கல்வியூட்டுவதற்கு பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழச்சிகள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல் ;

(ஆ) நீரகற்றுதல் மற்றும் சிறுநீரக மாற்றுச்சிகிச்சை உட்பட சிறுநீரக பிணிகளுக்காக சிகிச்சையை நாடும் நோயாளர்களுக்கு உதவுதல் ;

(இ) சிகிச்சை அளித்தலிலும் அதன் பின்னரான கவனிப்புக்கும் ஆதரவளிப்பதற்கு பல்வேறு மூலவளங்களிலிருந்து நிதிகளை திரட்டுதல் ;

(ஈ) சிறுநீரகத்தைப் பாதிக்கும் நோயினால் துன்புறும் ஆட்களுக்கு உதவுவதற்கு இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் இதனையொத்த குறிக்கோள்களையுடைய வேறு ஏதேனும் கழகத்துடன் அல்லது நிறுவனத்துடன் சேருதல் அல்லது ஒன்றுசேர்ந்து வேலைசெய்தல் ;

(உ) சிறுநீரகத்தைப் பாதிக்கும் நோய்கள் பற்றி ஆராய்ச்சி செய்கின்ற ஆராய்ச்சியாளர்களை ஊக்குவித்தலும் வசதி யளித்தலும் ; அத்துடன்

(ஊ) பொதுவாக மேற்தரப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானதான ஏனைய செயல்களை அல்லது கருமங்களைச் செய்தல்.

*மன்றத்தில் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4**. (1) மன்றத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய ஏதேனும் விதிகளுக்கும் அமைய நான்கு உறுப்பினர்களைக்கொண்ட முகாமைச்சபை ஒன்றினால் நிருவகிக்கப்பட வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த மன்றத்தின் முகாமைச்சபையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சபையானது, ஓர் இடாப்பைப் பேணிவருதல் வேண்டுமென்பதுடன், அதில் இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட தேதியன்று இதன்மூலம் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராயிருந்த ஒவ்வோராளினதும் அத்துடன் அதன் பின்னர் அதன் உறுப்பினரொருவராக தகுந்தவாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒவ்வோராளினதும் பெயரையும் இடுவித்துக் கொள்ளல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**5.** (1) காலத்துக்குக்காலம், கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு, பின்வரும் ஏதேனும் அல்லது எல்லா விடயங்கள் பற்றி இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இல்லாத விதிகளை ஆக்குவது, கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களை வகுப்பாக்கஞ்செய்தல் அத்துடன் செலுத்தற்படற்பாலதான உறுப்பாண்மை கட்டணங்கள், அவர்களை உறுப்பாண்மைக்குச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது உறுப்பாண்மையிலிருந்து நீக்குதல் ;

(ஆ) முகாமைச்சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும் அதனது தத்துவங்களும் கடமைகளும் ;

(இ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், அவர்களுடைய பதவிக்காலம், பதவியிலிருந்து விலகுதல், பதவியினை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றுதல் அத்துடன் அவர்களுடைய தத்துவங்கள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் கடமைகளும் பணிகளும் ;

(உ) சபையின் கூட்டங்களை கூட்டுவதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, அதற்கான கூட்ட நடப்பெண் மற்றும் அதில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபன நிதிகள் உட்பட அதனது ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதனுடைய குறிக்கோள்களை நிறை வேற்றுதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதுபோன்ற அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றது மான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**6.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியம், கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறுவகை யானவற்றின் பயனைக்கொண்டு அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும் சட்டப்படி ஆற்றலுடையதாதலும் இயலுமான தாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் மன்றத்தின் பெயரில் இருந்த அத்தகைய எல்லா ஆதனமும் இச்சட்டத்தின் நோக்கங் களுக்காக கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாப னத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றின்மீது கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப் படும் அத்தகைய ஏதேனும் ஆதனம், நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**7.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாப னத்தின் விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாத னத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென் பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொரு வராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அது அன்பளிப்புக்கள், இறுதி விருப்பாவணக் கையளிப்புக்கள், கொடைகள், நன்கொடைகள், உதவுதொகைகள் அல்லது காசாகவோ அல்லது வேறுவகையாக பெறப்பட்ட கட்டணங்கள் போன்ற வழிமூலம் பெறப்பட்ட எல்லாப் பணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பெறப்பட்ட எல்லாப் பணங்களையும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படவேண்டுமென்பதுடன் முகாமைச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கான ஏதேனும் பொருத்தமான முறையில் முதலீடு செய்யப்படுதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் அத்துடன் நிறைவேற்றுகையிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**9.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் முகாமைச்சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்